RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
Dr.மணிவண்ணன் MBBS.,MD.,
Dr.கார்த்திக்ராஜன் MS.,
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561 Ph : 04575 241 604, 246516 Cell: 9442341604, 8015741604

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 331 | டிசம்பர்.1 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# திருவண்ணாமலை தீபத்திருவிழாவின் 7ம் நாள் அண்ணாமலையார் கோயில் மகா தேரோட்டம் கோலாகலம்

## லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



திருவண்ணாமலை, டிச.01-

திருவண்ணாமலை தீபத்திருவிழாவின் 7ம் நாளான இன்றுகாலை பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் தொடங்கியது. முதலில் விநாயகர் தேர் புறப்பட்டது. இதைத்தொடர்ந்து அடுத்தடுத்து 5 தேர்கள் மாட வீதிகளில் பவனி நடைபெற உள்ளது. லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர், இரவில் பஞ்சமூர்த்திகள் மாட வீதியில் பவனி வந்து அருள்பாலிக்கின்றனர். தீபத்திருவிழாவின் 6ம் நாளான நேற்றிரவு வெள்ளித்தேரோட்டம் நடந்தது. வெள்ளி விமானங்களில் விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், வெள்ளித் தேரில் அண்ணாமலையார் பிரியாவிடை, இந்திர விமானத்தில் உண்ணாமுலை அம்மன், வெள்ளி விமானத்தில் சண்டிகேஸ்வரர் எழுந்தருளி மாடவீதியில் பவனி வந்தனர். அப்போது கொட்டும் மழையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவின் 7ம் நாளான இன்று காலை விழாவின் முக்கிய நிகழ்வுகளின் ஒன்றான பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் தொடங்கியது. முதலில் விநாயகர் தேர், 2வதாக வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் தேர், 3வதாக பெரிய தேர் எனப்படும் அண்ணாமலையார் தேர், 4வதாக உண்ணாமுலையம்மன் தேர், 5வதாக சண்டிகேஸ்வரர் தேர் ஆகியவை புறப்பட்டு மாடவீதியில் பவனி வரும். இதில் ஒரு தேர் மாடவீதியில் பவனி வந்து நிலையை அடைந்தவுடன் மற்றொரு தேர் புறப்படும்.

அதன்படி இன்று காலை 7.10 மணியளவில் முதலாவதாக விநாயகர் தேர் புறப்பட்டது. இதில் விநாயகர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஏராளமான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். தொடர்ந்து, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் தேர் பவனி வந்தது.அதனை தொடர்ந்து பெரிய தேர் எனப்படும் மகா ரதத்தில் அண்ணாமலையார் பிரியாவிடை சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி மாடவீதியில் பவனி வந்தனர். ஏராளமான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். இன்றிரவு உண்ணாமுலையம்மன் தேர் புறப்பாடு நடைபெறும். இந்த தேரை பெண்களே வடம் பிடித்து இழுப்பார்கள். அதனை தொடர்ந்து சண்டிகேஸ்வரர் தேர் வீதி உலா வரும். இன்று நடந்த பஞ்சமூர்த்திகள் தேரோட்டத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு தேரை வடம் பிடித்து இழுத்து தரிசனம் செய்தனர். தேரோட்டத்தையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

* போலீஸ் கெடுபிடி

திருவண்ணாமலையில் இன்றுகாலை தொடங்கிய தேரோட்டத்தில் போலீசாரின் கெடுபிடி அதிகமாக இருந்தது. மாடவீதியில் இருசக்கர வாகனங்களை கூட போலீசார் அனுமதிக்கவில்லை. அதேபோல் மாடவீதிகளை இணைக்கும், இணைப்பு சாலையிலும் இரும்பு தடுப்புகள் அமைத்து தடை செய்ததால் பக்தர்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

அதேபோல் குழந்தை வரம் கேட்டு வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள், திருவண்ணாமலையில் கரும்பு தொட்டில் கட்டி குழந்தையை உட்கார வைத்து மாடவீதியில் தோளில் சுமந்து சுற்றி வருவது மரபாகும். ஆனால் இன்று கரும்பு தொட்டில் கட்டி வந்த பக்தர்களை மாடவீதியில் போலீசார் அனுமதிக்காமல் வேறு வழியாக திருப்பிவிட்டனர். இதனால் அவர்கள் அதிருப்தி அடைந்தனர்.

# பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் சத்தீஸ்கரில் டிஜிபி, ஐஜி.க்கள் மாநாடு




ராய்ப்பூர்: டிச.1-

சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெற்று வரும் டிஜிபி.க்கள் மற்றும் ஐ.ஜி.க்கள் மாநாட்டுக்கு பிரதமர் மோடி நேற்று தலைமை தாங்கினார்.

அனைத்து மாநில டிஜிபி.க்கள் மற்றும் ஐ.ஜிக்கள் பங்கேற்கும் 60வது மாநாடு சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் உள்ள ஐஐஎம் வளாகத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கலந்து கொண்டார். இதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உளவுத்துறை தலைவர் தபன் குமார் தேகா, சிபிஐ இயக்குநர் பிரவீன் சூட் உட்பட காவல்துறை உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்றது குறித்து எக்ஸ் தளத்தில் கருத்து தெரிவித்த பிரதமர் மோடி, ''ராய்ப்பூரில் நடைபெற்ற டிஜிபி.க்கள் மற்றும் ஐ.ஜி.க்கள் மாநாட்டின் முதல் நாளில் நாட்டின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. காவல் துறையில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளையும், புதுமை கண்டுபிடிப்புகளையும் பகிர்ந்து கொள்ள இந்த மாநாடு மிகச்சிறந்த இடம்'' என குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டை தொடங்கி வைத்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசுகையில், ''நக்சல், வடகிழக்கு மற்றும் ஜம்மு காஷ்மீர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை மோடி அரசு அளித்துள்ளது. நக்சல் பாதிப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது. போதைப் பொருள் மற்றும் அனைத்து வகையான குற்றங்களை ஒழிக்க காவல்துறை முழு வீச்சில் செயல்பட வேண்டும். உளவுத் தகவல்கள் துல்லியமாக இருக்க வேண்டும். அனைத்து மாநில காவல்துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். காவல்துறையை நவீனமாக்க புதிய குற்ற சட்டங்களை பயன்படுத்த வேண்டும்'' என்றார்.

# எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத ஆட்சியர் மீது நடவடிக்கை தேவை: அமைச்சர் ஐ.பெரியசாமி

திண்டுக்கல், டிச.01-

எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் அமைச்சர் ஐ.பெரியசாமி இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்ட ஆத்தூர் தொகுதியில் எஸ்ஐஆர் பணிகள் அவசரகோலத்தில் நடைபெறுகிறது. வாக்குச் சாவடி நிலை அலுவ லர்களை அழைத்து வட்டாட்சியர் முத்துமுருகன், இனி இருக்கும் படிவங்களை, இடம்பெயர்ந்து விட்டார்கள் எனப் பதிவு செய்து முடியுங்கள் என்று வலியுறுத்துவதாக தகவல்கள் வருகிறது.

ஒட்டுப்பட்டியில் மொத்தம் 60 வாக்கா ளர்களை இடம்பெயர்ந்தாக பதிவு செய்துவிட்டார்கள். குறிப்பாக சின்னாளபட்டி பேரூராட்சியில் 25 ஆயிரம் வாக்குகள் உள்ளது. இதில் 7227 வாக்குகளை இடம்பெயர்வு என முடித்துவிட்டனர். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த தேர்தலில் 17 ஆயிரத்திக்கும் மேல் வாக்குககள் பதிவாகியுள்ளது. ஆனால் நேற்றுவரை 16100 வாக்காளர்கள் தான் பதிவு செய்துள்ளனர்.

அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களையும் கட்டாய ப்படுத்தி இடம்பெயர்ந்துவிட்டார்கள் என 25 ஆயிரம் வாக்குகளை இல்லாமல் செய்துவிட்டனர். இந்த அநீதி எங்காவது நடக்குமா, மாவட்ட ஆட்சியரும், வட்டாட்சியரும் திட்டமிட்டு ஆத்தூர் தொகுதியில் வாக்கா ளர்களை நீக்கிவிட்டனர்.

கடந்த இரண்டு தினங்களாக எஸ்ஐஆர் பணி ஆத்தூர் தொகுதியில் நடைபெறவில்லை. ஆத்தூர் தொகுதியில் எஸ்ஐஆர் பணியில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது. மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒவ்வாரு வார்டிலும் 250க்கும் மேற்பட்ட வாக்காளர்களை இடம்பெயர்ந்துள்ளனர் எனப் பதிவு செய்துள்ளனர். இவ்வளவு பெரிய தவறு தமிழகத்தில் எங்கும் நடத்திருக்காது.

தேர்தல் ஆணையம் பரிசீலனை செய்து மறு சேர்க்கை நடத்தவேண்டும். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியருக்கு யார் இந்த அதிகாரம் கொடுத்தது. சின்னாளபட்டி பேரூராட்சியில் 7713 பேரை நீக்கியுள்ளனர்.

எஸ்ஐஆர் பணியை முறையாக நடத்தாத மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து விசாரித்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவேண்டும். காலஅ வகாசம் இருந்தபோதிலும் மாவட்ட ஆட்சியர் எஸ்ஐஆர் பணியை முடிக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு சட்டத்திற்கு புறம்பாக அவசரகதியில் செயல்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியரை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# 'காசாவில் இடிந்த கட்டிடங்களில் 10,000+ உடல்கள்...' உலுக்கும் மீட்பு அனுபவம்



இஸ்ரேல், டிச.01-

இஸ்ரேல் படைகளின் பல்வேறு உக்கிரமான தாக்குதல்களினால் காசாவில் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் 10,000க்கும் அதிகமான உடல்கள் சிக்கியிருக்கின்றன என்றும், அவற்றை மீட்பது சாதாரணக் காரியமல்ல என்றும் காசாவின் குடிமைப் பணியாளர்கள் அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

காசா நகரின் கிழக்குப் பகுதியான அல்சாஹா அருகே செப்டம்பர் 17 அன்று நடந்த பணிதான் நூஹ் அல்ஷக்னோபிக்கு அதிகம் துன்பம் தருகிறது. இஸ்ரேல் படைகள் ஒரு வீட்டை குண்டுவீசி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தது. அவர்களில் பெரும்பாலோரின் உடல்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தன.

அல் ஷக்னோபியின் குழு இரண்டு சிறுமிகளின் உடல்களை வெளியே எடுத்ததும் தொடர்ந்து தோண்டினர்; அவர்கள் இடிந்து விழுந்த தரைத் தளங்களின் கீழ் ஊர்ந்து சென்று உடல்களை மீட்க, யாரேனும் உயிருடன் இருந்தால் அவர்களைக் காப்பாற்றவும் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நூஹ் அல் ஷக்னோபி 'இன்டெர்செப்ட்' ஊடகத்திற்குக் கூறும்போது, "யாரேனும் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை இருந்தால்தான் கீழே செல்வோம், இல்லையெனில் மேலிருந்து கீழ் நோக்கித் தோண்டுவோம். அதன்பிறகு நாங்கள் கண்டது பயங்கரமானதொரு கனவை விடவும் கொடூரமான நிஜம்'' என்றார்.

இடிபாடுகளுக்குள் 12 மீட்டர் அவர்கள் நடந்தனர். இடிபாடுகள் நெடுக உடைந்த கால்கள், கைகள், தாயின் உடல் அதை இறுக அணைத்து இறந்துபோன குழந்தை என்று உடல்கள் அருகே குடிமைப் பணியாளர்கள் ஊர்ந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அனுபவம் குண்டுவீச்சுத் தாக்குதலின் தாக்கத்தை அவர்களுக்கு உணர்த்தியது. இடிபாடுகளின் ஆழத்திலிருந்து ஒரு சிறுமி 'நான் இங்கே... நான் இங்கே' என்று ஈனமாக முனகுவதும் அவர்களுக்குக் கேட்டது. அந்தச் சிறுமியைக் காப்பாற்றினர்.

இரண்டு ஆண்டுகள் நீடித்த தாக்குதல்களுக்குப் பிறகு, காசா குடிமைப் பாதுகாப்பு படையில் சுமார் 900 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்; அதன் செயல்திறன் 90% குறைந்துவிட்டதாகத் தெரிவித்தனர். கனரக இயந்திரங்கள் இல்லாத சூழலில், அவர்கள் சுத்திகள், கோடரிகள், கரணைகள் போன்ற எளிய கருவிகளையே பயன்படுத்துகின்றனர். ஓர் உடலை மீட்பதற்கே பல நாட்கள் ஆகிறது என்கின்றனர்.

இடிபாடுகளுக்கு இடையில் 10,000க்கும் அதிகமான உடல்கள் கிடக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களை இந்த வேதனையான பணியில் ஊக்கப்படுத்துவது என்னவெனில், இடிபாடுகளிலிருந்து ஒரு குரல், ஓர் உயிரின் சத்தம் கேட்டால் போதும் அவரைக் காப்பாற்ற இவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைப்பதே.

24 வயதான அல் ஷக்னோபி ஏற்கெனவே 7 ஆண்டுகளாக காசா குடிமைப் பாதுகாப்பில் பணியாற்றுகிறார். அவரின் வீடு தல்அல் ஹவ்வா பகுதியில் அழிக்கப்பட்டு, குடும்பம் தெற்கில் இடம்பெயர்ந்து வாழ்கிறது. போர் நிறுத்தம் வந்தால் மக்கள் மூச்சு விடலாம் என்கிறார் அல் ஷக்னோபி, ஆனால், இவர்களைப் போன்ற பணியாளர்களுக்கோ போர் முடிந்த பிறகுதான் போரே தொடங்குகிறது. அதாவது உடல்களை மீட்பது.

போரில் இறந்த தன் அத்தையின் உடலும் இந்த 10,000 உடல்களில் ஒன்றாக இருக்கலாம் என்கிறார் ஷக்னோபி. இஸ்ரேல் தாக்குதலில் தீவிரமாக பாதிக்கப்பட்ட ஷுஜாயா, ரஃபா உட்பட பல பகுதிகள் இன்னும் அணுக முடியாதவையாக உள்ளன. இஸ்ரேலி படைகள் அப்பகுதிகளை 'யெல்லோ ஸோன்' என்று கூறி மீட்புக்குழுவுக்கு அனுமதி மறுத்துள்ளது.

"இந்த இடைக்கால போர் நிறுத்தத்தின்போது சில உடல்களை மட்டுமே மீட்டோம்,'' என்றார் அல் ஷக்னோபி. "எங்களுக்கு இயந்திரங்கள் இல்லை. சில இடங்களில் நூற்றுக்கணக்கானோர் இடிபாடுகளுக்குள் இருப்பதை அறிந்திருந்தும் செல்ல முடியவில்லை'' என்றார் அவர்.

இந்த மீட்புப் படையைச் சேர்ந்த மற்றொரு வீரரான 25 வயதான அல் கம்மாஷ் கூறும்போது, குரல் "கேட்கிறது, ஆனால் இடுபாடுகளுக்குள் செல்ல முடியாமல் போய் அவரைக் காப்பாற்ற முடியாமல் போனால் கடும் வேதனைதான் ஏற்படுகிறது'' என்றார். "ஒரு பணிக்கு அனுப்பப்பட்டால் அதை நான் முழுமையாக முடிக்க வேண்டும் என்ற பொறுப்பு எனக்குண்டு'' என்றார் அவர்.

சுவர் அல்லது மாடியின் கீழ் சிக்கியிருந்தால் ஓர் உடலை மீட்பதற்கே 10 12 மணி நேரங்கள் ஆகும். "சில நேரங்களில் கனரக கருவிகள் தேவைப்படுவதால் மீட்க முடியாமலே கூட போகும்'' என்றார்.

இந்த இஸ்ரேலிய தாக்குதல் தன்னை உணர்ச்சியற்ற மரக்கட்டையாகவே மாற்றி விட்டது என்கிறார் அல் ஷக்னோபி, "போரின் தொடக்கத்தில் உடல்களை பார்க்கவே முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டுதான் உடல்களை மீட்கிறோம். வெள்ளைத் துணிகளில் உடல்களை எடுத்து வந்தோம். அந்த உடல்கள் மிகவும் நொய்மையாகிவிட்டதால் தொடக் கூட மனம் வரவில்லை'' என்று வேதனையுடன் கூறுகிறார் ஷக்னோபி.

உடல்கள் பலவிதம்... அழுகிய நிலையில் கிடக்கும், கை, கால் மற்றும் சிதறிய உடல் உறுப்புகள், எரிந்த உடல்கள், எலும்புக் கூடுகள் வெறும் மண்டை ஓடுகள் என்று ஆங்காங்கே இடிபாடுகளில் கிடக்கின்றன. சூரிய ஒளியில் உடல்கள் வேகமாக அழுகுவதால் அருகில் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் என்று குடிமைப் படையின் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

டி.என்.ஏ சோதனைகள் இல்லை என்பதால் உறவினர்கள் உடலை அடையாளம் காண முடியாமல் தவிக்கின்றனர். உடைகள், காலணிகள், மோதிரங்கள், அடையாள அட்டைகள் போன்றவற்றைத் தான் அடையாளமாக பயன்படுத்துகிறார்கள். அடையாளம் தெரியாத உடல்கள் பெயரில்லா கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றன.

குடும்பங்கள் அருகில் காத்திருக்கும்போது, அவர்கள் வெளியே கொண்டுவரும் உடலைக் கண்டு மீளாத துயரம் வெடிக்கிறது. இந்த பணியாளர்கள் தங்கள் சொந்த குடும்பங்களே தாக்குதலால் பாதிக்கப்பட்ட சூழலில் இந்த பயங்கர பணியை செய்து வருகின்றனர்.

இந்தக் கடினமான பணியை எது அவர்களைச் செய்ய உத்வேக மூட்டுகிறது என்றால், உயிருடன் இருப்பவர்களை மீட்கலாம் என்பதே என்கின்றனர் கடினமான வேலையில் ஈடுபட்டுள்ள காசா குடிமைப் பணியினர். இன்னமும் மரணமடைந்தவர்களின் உடலுக்காகவும் இறுதிச் சடங்கு செய்யவும் மக்கள் காத்திருக்கின்றனர்.

மேலும் பலர் காணாமல் போன தங்களது மகனோ, மகளோ, சகோதரனோ, சகோதரியோ எங்கேயோ இருப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் எங்கிருந்தாவது குடிமை பணியினரால் மீட்டெடுக்கப்பட்டு உயிருடன் திரும்பி வருவார்கள் என்றும் நம்பிக்கையிலும் காசா மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.



# காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் உதயநிதி பிறந்தநாள் விழா

**மாணவரணி ஆர்.சதீஷ்குமார் ஏற்பாடு, ஒசெ.ஆர். எம். கென்னடி, வி.சி.கண்ணப்பன், கணேசன், அழகப்பன் பங்கேற்பு**

காளையார் கோவில், டிச.01-

சிவகங்கை மாவட்டம் முழுவதும் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்..

அந்த வகையில் காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம். கென்னடி தலைமையில், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் கொல்லங்குடி ஆர்.சதீஷ்குமார் ஏற்பாட்டில், கொல்லங்குடி அரசுப் பள்ளி மாணவ மாணவியருக்கு இனிப்பு, நோட்டு, புத்தகங்கள், பேனா, பென்சில்கள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்...

இந்த நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடி ரைஸ்மில் கணேசன், ஒன்றிய துணைச் செயலாளர்களான, கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் அறங்காவலர் குழுத் தலைவர் கண்டிப்பட்டி வி. சி. கண்ணப்பன், செல்லப்பாண்டி, கீரனூர் தமிழ்ச்செல்வம் , நேரு வேளார், கொல்லங்குடி அறங்காவலர் கண. சந்திரன் வேளார் , சீனிவாசன்,சிவல் புஞ்சை நவநீதக்கிருஷ்ணன் , ஒன்றிய திமுக தகவல் தொழில் நுட்ப அணி சுசீந்திரன், சைதை அசோக், அஜீத்,சதீஷ் பெருமாள் உள்ளிட்ட காளையார் கோவில் வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக மாணவரணி அமைப்பாளர் கொல்லங்குடி ஆர். சதீஷ்குமார் சிறப்பாக செய்திருந்தனர்...

# மெட்ரோ ரயில் திட்டத்திற்கு கையெழுத்து இயக்கம் நடத்திய மறுமலர்ச்சி மக்கள் இயக்கம்

கோவை, நவ.30-

கோவை மாவட்டம் கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி வழங்க மத்திய அரசை வலியுறுத்தி மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கியது.

கோவை மாவட்டத்தில் உள்ள பல லட்ச மக்கள் பயன்பெறும் வகையில் கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வலியுறுத்தி கோவை காந்திபுரத்தில் உள்ள நகரபேருந்து நிலையத்தின் முன்பு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் நிறுவனத் தலைவர் துவக்கி வைத்தார்.



அப்போது நகர பேருந்துகளில் வந்து இறங்கிய மற்றும் நகர பேருந்துக்கு செல்லும் பயணிகளிடம் கோவை மெட்ரோ ரயில் திட்டம் அவசியம் குறித்து விரிவான துண்டு பிரசுரத்தை மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் தொண்டர்கள் வழங்கினார்கள். விரிவான துண்டு பிரசுரத்தை ஆர்வமுடன் வாங்கிய மக்கள் முழுமையாக படித்துவிட்டு கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டம் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும் என கையெழுத்திட்டு சென்றனர்.

மேலும் இது குறித்து பயணிகளிடம் கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் வேண்டுமா என்ற கேள்வியை முன்வைத்து கேட்கப்பட்டது அதற்கு பொதுமக்கள் கூறுகையில் அனைத்து வகையிலும் கோவை மாவட்டம் சிறந்து விளங்குவதாகவும் கோவைக்கு கண்டிப்பாக மெட்ரோ ரயில் திட்டம் அவசியம் வேண்டும் என்று கூறினார்கள்.

அதன் பின்னர் கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் நிறுவன தலைவர் கோவை ஈஸ்வரன் இயக்க நிர்வாகிகளுடன் செய்தியாளர்களுக்கு சிறப்பு பேட்டி அளித்தார்.

அப்போது மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் முத்துசாமி, மாநிலஅமைப்பு செயலாளர் செல்வராஜ் , பொருளாளர் பெருமாள் சாமி, தலைமை நிலைய செயலர் ராஜ், மற்றும் பொண்ணுகுட்டி, ரமேஷ் உள்ளிட்ட ஏராளமான மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் தொண்டர்களும் நிர்வாகிகளும் கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு கையெழுத்து இயக்கம் செயல்பாட்டில் கலந்து கொண்டனர் .

# சென்னை - ரயில்வே பராமரிப்பு பணி 16 விரைவு ரயில்களின் சேவையில் மாற்றம்

சென்னை, டிச.01-

சென்னை ரயில்வே கோட்டத்தில் பல இடங்களில் டிசம்பர் மாதத்தில் ரயில்வே பராமரிப்பு பணி நடைபெறவுள்ளதால், வைகை உள்பட 16 விரைவு ரயில்கள் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளன.




அதன் விவரம்: போத்தனூர் சென்னை சென்ட்ரலுக்கு டிச.8ம் தேதி மாலை 6.30 மணிக்கு புறப்படும் விரைவு ரயில் (06124) வழியில் 15 நிமிடம் நின்று செல்லும். இதே ரயில் டிச.15, 22 29 ஆகிய தேதிகளில் வழியில் 5 நிமிடம் நின்று செல்லும். சென்னை எழும்பூர் மதுரைக்கு டிச.4, 13, 16, 18, 20, 23 ஆகிய தேதிகளில் மதியம் 1.45 மணிக்கு புறப்படும் வைகை விரைவு ரயில் (12635) வழியில் 10 நிமிடங்கள் நின்று செல்லும்.

புதுச்சேரியில் இருந்து காச்சிகூடாவுக்கு டிச.6, 26, 30 ஆகிய தேதிகளில் புறப்படும் விரைவு ரயில் (17654), வரும் வழியில் ஒரு மணி நேரம் நின்று செல்லும். புதுச்சேரி காக்கிநாடாவுக்கு டிச.6, 22, 27 ஆகிய தேதிகளில் புறப்படும் சர்க்கார் விரைவு ரயில் (17656) வழியில் ஒரு மணி நேரம் நின்று செல்லும்.

சென்னை சென்ட்ரல் கொல்லத்துக்கு டிச.6ம் தேதி இரவு 11.50 மணிக்கு புறப்படும் விரைவு ரயில் (06117) செல்லும் வழியில் ஒன்றரை மணி நேரம் நின்று செல்லும். சென்னை சென்ட்ரல் ஈரோடுக்கு டிச.21, 28 ஆகிய தேதிகளில் இரவு 11 மணிக்கு புறப்படும் ஏற்காடு விரைவு ரயில் (22649) வழியில் 50 நிமிடங்கள் நின்று செல்லும்.

இதேபோல் சென்னை சென்ட்ரல் மங்களூருக்கு டிச.24, 31 ஆகிய தேதிகளில் இரவு 8.10 மணிக்கு புறப்படும் விரைவு ரயில் (12601) வழியில் 5 நிமிடம் நின்று செல்லும். மொத்தம் 16 விரைவு ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளன. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டிட்வா புயலால் 3 பேர் பலி; 57 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் பாதிப்பு: தமிழக அரசு தகவல்

சென்னை, டிச.01-

டிட்வா புயல் காரணமாக தமிழகத்தில் இதுவரை 3 பேர் பலியானதாகவும், 57 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலான்மைத் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமசந்திரன் சென்னையில் இன்று (நவ.30) செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் டிட்வா புயல் மழை தொடர்பான சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்தனர். இருவர் தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இறந்தனர். மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் ஒருவர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தார். 149 கால்நடைகள் உயிரிழந்தன.

57 ஆயிரம் ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், தஞ்சையில் 15 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்களும், மயிலாடுதுறையில் 8000 ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர டெல்டா மாவட்டங்களில் 234 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

38 நிவாரண முகாம்கள்: தமிழகத்தில் மழை பாதிப்பு அதிகமுள்ள 9 மாவட்டங்களில் 38 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தி அதில் 2300 பேரை தங்க வைத்துள்ளோம்.

புயலின் அடுத்தக்கட்ட தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று மதியம் புதிய அறிவிப்பு வெளியிடும். அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்கள் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அரசு சார்பாக வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் பின்பற்ற வேண்டும்

# “தமிழகத்தில் வாக்கு திருட்டு நடந்தால் புரட்சி வெடிக்கும்” பிரேமலதா விஜயகாந்த்

ஈரோடு, டிச.01-

எஸ்ஐஆர் மூலம் வாக்கு திருட்டு நடந்தால் தமிழகத்தில் நிச்சயமாக மக்கள் புரட்சி வெடிக்கும் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.



ஈரோட்டில் இன்று தேமுதிக ஈரோடு கிழக்கு மற்றும் மேற்கு சட்டப்பேரவை தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்று பேசினார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் கூட்டணி குறித்து ஜனவரி மாதம் 9ம் தேதி கடலூரில் நடக்கும் மாநாட்டில் அறிவிப்போம். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. கொலை சம்பவங்கள், பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது. இதற்கு எல்லாம் காரணம் மதுக்கடைகள் தான்.

மின் கட்டண உயர்வால் நெசவுத் தொழிலை நம்பியுள்ளவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வரி உயர்வால் பல தொழில்கள் முடங்கி உள்ளன. மக்கள் எங்களிடம் தெரிவிக்கும் குறைகள் குறித்து நாங்கள் ஆட்சியாளர்களிடம் கேள்வி கேட்கிறோம். திமுக அளித்த வாக்குறுதிகளில் 50 சதவீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டு உள்ளது. எஞ்சிய காலத்தில் மற்ற வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்ற வேண்டும்.

தமிழகத்தில் ஒரு எம்ஜிஆர் தான், ஒரு விஜயகாந்த் தான். இருவருடைய இடத்தையும் வேறு யாரும் நிரப்பமுடியாது. திருப்பூர், ஈரோடு, கோவை மாவட்டங்களில் வடமாநிலத்தவர் ஏராளமானவர்கள் பணியாற்றி வருகின்றனர். வடமாநிலத்தவர்கள் இங்கு பணியாற்றலாம். ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கக்கூடாது.

அவரவர் சொந்த மாநிலத்தில் தான் வாக்குரிமை இருக்க வேண்டும். வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வாக்குகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் மூலம் வாக்குத் திருட்டு நடந்தால் தமிழகத்தில் நிச்சயமாக மக்கள் புரட்சி வெடிக்கும். தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருந்தாலும், ஆண்ட கட்சியாக இருந்தாலும் கூட்டணி இல்லாமல் தேர்தலை சந்திக்க முடியாது.

தேர்தல் முடிவு வெளியாகும்போது கூட்டணி அமைச்சரவை அமைக்க வேண்டிய சூழல் ஏற்படும். 2026 சட்டப்பேரவை தேர்தலில் தேமுதிக இடம்பெறும் கூட்டணி வெற்றிபெறும், அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கும். அதிமுக மாநிலங்களை உறுப்பினர் பதவி தருவதாக கூறி எங்களை ஏமாற்றவில்லை. நாங்கள் 2025ம் ஆண்டில் கேட்டோம், அவர்கள் 2026 இல் தருவதாக கூறியுள்ளார்கள்.

ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்காக தேமுதிக கூட்டணியை முடிவு செய்யாது. கடந்த 2011ம் ஆண்டு நிர்வாகிகள், தொண்டர்கள், மக்கள் விரும்பிய கூட்டணியில் விஜயகாந்த் இணைந்தார். அவர் காட்டிய வழியில் 2026 தேர்தலில் தேமுதிக கூட்டணியை முடிவு செய்யும். ஆட்சிக்கு எதிரான அலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# சேலத்தில் 77.07 % வாக்காளர்களிடம் எஸ்ஐஆர் படிவம் திரும்பப் பெறப்பட்டன: அதிகாரிகள் தகவல்

மேட்டூர், டிச.01-

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில், 98.72 % வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கிய நிலையில், 77.07 % படிவ ங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளன என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி கடந்த மாதம் 4ம் தேதி முதல் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த படிவத்தை நிரப்பிய வாக்காளர்களிடம் இருந்து படிவங்கள் திரும்ப பெறப்பட்டு வருகிறது. குறிப்பாக, அப்பகுதியில் வாக்காளர்களிடம் இருந்தும், வசிக்காதவர்கள் உள்ளிட்ட பூர்த்தி செய்த படிவங்களை மீண்டும் பெறும் பணியில் வாக்கு சாவடி நிலை அலுவலர்கள், வாக்கு சாவடி முகவர்கள், மாநகராட்சி , பேரூராட்சி, நகராட்சி, கல்வித் துறை ஊழியர்கள், அரசியல் கட்சிகள் என அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, சேலம் மாவட்டத்தை பொறுத் தைவரை, மாநகரில் 3 தொகுதிகளிலும், மாவட்டத்தில் 8 தொகுதிகளில் உள்ளன.




இதில் மாநகரில் உள்ள சேலம் மேற்கு தொகுதியில் 98.09 % படிவங்கள் வழங்கிய நிலையில் 66.30 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. சேலம் வடக்கு தொகுதியில் 96.18 % படிவங்கள் வழங்கிய நிலையில் 67.63 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. சேலம் தெற்கு தொகுதியில் 99.10 % படிவங்கள் வழங்கிய நிலையில் 71.68 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன.

அதேபோல், மாவட்டத்தில் கெங்கவல்லி தொகுதியில் 99.25 % படிவங்கள் வழங்கிய நிலையில் 81.42 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. ஆத்தூர் தொகுதியில் 98.23 % படிவங்கள் வழங்கிய நிலை யில் 81.31 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. ஏற்காடு தொகுதியில் 99.55 % படிவங்கள் வழங்கிய நிலையில் 78.77 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. ஓமலூர் தொகுதியில் 99.04 % படிவங்கள் வழங்கிய நிலையில் 82.67 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன.

மேட்டூர் தொகுதியில் 98.94 % படிவங்கள் வழங்கிய நிலையில் 74.21 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. எடப்பாடி தொகுதியில் 99.79 % படிவங்கள் வழங்கிய நிலையில் 81.13 % படிவங்களும் திரும்ப பெறப்ப ட்டுள்ளன. சங்ககிரி தொகுதியில் 98.10 % படிவங்கள் வழங்கிய நிலையில் 81.30 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன. வீரபாண்டி தொகுதியில் 99.66 % படிவங்கள் வழங்கிய நிலையில் 82.64 % படிவங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் ஒட்டு மொத்தமாக 30.30 லட்சம் வாக்காளர்கள் உள்ள நிலையில், 29.91 லட்சம் வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 23.35 லட்சம் வாக்காளர்களிரிடம் இருந்து படிவங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளன. குறிப்பாக, 98.72 % வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கிய நிலையில், 77.07 % படிவங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளன. தற்போது வரை, மாவட்டத்தில் 69 ஆயிரம் வாக்காளர்கள் இறந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வாக்காளர்கள் இறப்பு, நிரந்தர குடிபெயர்வு, நிரந்தர முகவரி மாற்றம் என 4.97 % பேர் கண்டறிய ப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இறப்பு, நிரந்தர குடிபெயர்வு, நிரந்தர முகவரி மாற்றம் தவிர்த்த இதர வாக்காளர்கள் கணக்கீட்டு படிவத்தை பூர்த்தி செய்து உடனயாக வழங்க வேண்டும். படிவங்களை வழங்கியவர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெறும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மேட்டூர் அணை அடிவார வாய்க்கால் பகுதியில் ஐயப்ப பக்தர்கள் பேருந்து கவிழ்ந்து விபத்து: 10 பேர் காயம்

மேட்டூர், டிச.01-

மேட்டூர் அணை அடிவார வாய்க்கால் பகுதியில் ஐயப்ப பக்தர்கள் வந்த பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் ஓட்டுநர் உள்பட 10 பேர் காயமடைந்தனர்.



திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே உள்ள பட்டியந்தல் கிராமத்தில் இருந்து ஐயப்ப பக்தர்கள் 80 பேர் ட்ராவல்ஸ் மற்றும் பேருந்தில் சபரிமலைக்கு சென்று கொண்டிருந்தனர். மேட்டூர் காவிரியில் நீராட இன்று காலை காவேரி பாலம் அருகில் பேருந்தில் இருந்த ஐயப்ப பக்தர்கள் இறங்கிய நிலையில், பேருந்தில் 10 பேர் மட்டும் அமர்ந்திருந்தனர்.

இதையடுத்து ஓட்டுநர் வேலு (38) பேருந்தை பின்னோக்கி இயக்கி சென்ற போது எதிர்பாராத விதமாக பழுதடைந்த தார் சாலையில் சென்றதால் பேருந்து கவிழ்ந்தது. இதனால் சுமார் 40 அடி பள்ளத்தில் தொங்கியபடி பேருந்து இருந்தது. இதுதொடர்பாக தகவலறிந்த மேட்டூர் போலீஸார், சம்பவ இடத்திற்கு வந்து, பேருந்தில் சிக்கி கொண்டவர்களை மீட்கும் பணியில் ஈடுப்டனர்.

இதையடுத்து பேருந்தில் இருந்த ஐயப்ப பக்தர்கள் கண்ணாடியை உடைத்து கொண்டு வெளியேறினார்கள். பேருந்து ஓட்டுநர் வேலு லேசான சிராய்ப்பு காயங்களுடன் தப்பினார். பேருந்தில் அமர்ந்திருந்த மோகன் குமார் (33), தண்டபாணி (49), வேலாயுதம் (35), முருகன் (57), பன்னீர் தாஸ் (40), பாபு (47), பச்சையப்பன் (45), குமரேசன் (22), ரஞ்சித் குமார் (20) ஆகியோருக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டது.

காயமடைந்த 10 பேரும், ஆம்புலன்ஸ் மூலம், மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக மேட்டூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பள்ளத்தில் கவிழ்ந்த பேருந்தை, கிரேன் கொண்டு மீட்கும் பணியில் போலீஸார் ஈடுபட்டனர். மேட்டூர் காவிரியில் புனித நீராட தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்தப் பகுதிக்கு செல்லும் மட்டம் சாலையை போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

நகராட்சிக்கு சொந்தமான இந்த சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு மண் சரிவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது.

இதனை சீரமைக்க கோரி பலமுறை அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தும் சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில் மண் சரிந்த சாலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாததால் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டினர்

# வீட்டில் பெருமாள் சிலை வைத்து வழிபட போறீங்களா? இதை தெரிஞ்சுக்க மறந்துடாதீங்க

ஒவ்வொரு தெய்வத்தை வழிபடுவதற்கும் ஒரு முறை என்று உள்ளது. அதே போல் தெய்வ சிலைகளை வீட்டில் வைத்து வழிபடுவதற்கும் தனியாக விதிமுறைகள் உள்ளது. இவற்றை முறையாக பின்பற்றி, வழிபட்டால் மட்டுமே அந்த தெய்வத்தின் அருளை பெற முடியும். இல்லாவிட்டால் எதிர்மறை விளைவுகளை பெற வேண்டி இருக்கும். அந்த வகையில் வீட்டில் பெருமாள் சிலையை வைத்து வழிபடுவதற்கான முறையை தெரிந்து கொள்ளலாம்.

பெருமாளை, காக்கும் கடவுளாக வழிபடுகிறோம். வறுமை நீங்கி செல்வ செழிப்புடன் வாழ்வதற்கும், விருப்பங்கள் நிறைவேறுவதற்கும், வாழ்வில் நிலைத்தன்மை ஏற்படுவதற்கும், உயர்ந்த நிலையை அடைவதற்கும், பாவங்கள் நீங்கி வைகுண்ட பதவியை அடைவதற்கும் பெருமாளை வழிபடுவது உண்டு. பெருமாளின் திருநாமங்களை நினைத்தாலும், உச்சரித்தாலும், காதினால் கேட்டாலும் அது மகா புண்ணியத்தை தரக் கூடியதாகும். ஒரே ஒரு துளசியை பெருமாளுக்கு படைத்து வழிபட்டாலும் அவர் மனம் இறங்கி, நம்முடைய பாவங்களை போக்கி, வேண்டிய அனைத்து நலன்களையும் அருள்வார் என்பது நம்பிக்கை.

மற்ற தெய்வங்களின் சிலைகளை வீட்டில் வைத்து வழிபடுவது போலவே பெருமாள் சிலையை, குறிப்பாக திருப்பதி ஏழுமலையான் சிலையை வீட்டில் வைத்து பலரும் வழிபடுவது உண்டு. ஆனால் இப்படி வழிபடுவதற்கு ஒரு முறை உண்டு. நீங்களும் உங்கள் வீட்டில் பெருமாள் சிலை வைத்து வழிபட வேண்டும் என நினைத்தால், இந்த விதிமுறைகளை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பெருமாளை வழிபடுவதன் முழு பலனையும் நீங்கள் பெற முடியும்.

பெருமாள் விஷ்ணு சிலை வைப்பதற்கு உகந்த இடம், அதற்கென ஒதுக்கப்பட்ட பூஜை அறை அல்லது பீடத்தில் மட்டுமே வைக்க வேண்டும் . அப்படி ஒரு இடம் இல்லையென்றால், வரவேற்பறையில் ஒரு சுத்தமான, அமைதியான மூலையையும் பயன்படுத்தலாம். குளியலறை, சமையலறை அல்லது தரைக்கு நேராக சிலை வைப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த இடங்கள் ஆன்மீக ஆற்றலுக்கு உகந்தவை அல்ல. பாரம்பரியமாக, சிலையை வடக்கு அல்லது கிழக்கு திசையை நோக்கி வைப்பது நல்லது. இந்த திசைகள் வளர்ச்சி மற்றும் நல்ல அதிர்ஷ்டத்துடன் தொடர்புடையவை. தெற்கு திசையை நோக்கி வைப்பதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் அது எதிர்மறை ஆற்றலைக் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

சிலையை எங்கு வைக்கிறோம் என்பது முக்கியம். கண் மட்டத்திலோ அல்லது சற்று உயரத்திலோ வைக்க வேண்டும். மிகவும் உயரத்திலோ அல்லது கால்களுக்கு அருகிலோ வைக்கக்கூடாது. சுத்தமான, உறுதியான மேடையில் சிலையை வைக்கவும். அந்த இடத்தை எப்போதும் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்க வேண்டும். பித்தளை, வெண்கலம் அல்லது கல்லால் ஆன சிலையை மட்டுமே வைத்து வழிபட வேண்டும். நல்ல தரமான மரத்தாலும் செய்யப்பட்ட சிலைகளையும் வைத்து வழிபடலாம். ஆனால் அவை நேர்த்தியாக செய்யப்பட்டிருக்க வேண்டும். உடைந்த அல்லது சேதமடைந்த சிலைகளைத் தவிர்க்க வேண்டும்.

பெருமாளை வழிபடும் போது நேராக அமர்ந்து வழிபட வேண்டும். சிலையை வைத்திருக்கும் இடத்தையும், பீடத்தையும் சுத்தமாக வைத்திருப்பதும், தினமும் மலர்கள், வாசனை பொருட்கள் ஆகியவற்றால் அலங்காரம் செய்து வழிபட வேண்டும். பெருமாள் அலங்காரப் பிரியர் என்பதால் அவருக்கு விதவிதமான பூக்களால் அலங்கரிப்பது, சுவையான பலகாரங்கள் படைத்து வழிபடுவது நல்ல அதிர்வுகளால் நிரப்பும். தேவையற்ற பொருட்களை அங்கு சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பெருமாளுடன் மகாலட்சுமி சேர்ந்து இருப்பது போன்ற சிலையை வைத்து வழிபடுவது கூடுதல் விசேஷமானதாகும். திருப்பதி பெருமாள் தனியாக இருப்பதை விட, பத்மாவதி தாயாருடன் சேர்ந்து இருக்கும் சிலையை வைத்து வழிபடலாம். பெருமாள் சிலையை படுக்கை அறையில், தரையில், படிக்கட்டுகளுக்கு கீழ், கண்ணாடியை பார்த்தவாறு வைப்பது தவறு. இதனால் எதிர்மறை ஆற்றல்களே அதிகரிக்கும். பெருமாள் சிலை வீட்டில் வைப்பது வெறும் அலங்காரம் கிடையாது. வீட்டில் வைப்பதால் செழிப்பும், அருளும் நிறைந்திருக்க செய்யும். இந்த முறைகளை பின்பற்றி பெருமாள் சிலையை வீட்டில் வைத்த வழிபட்டால் பெருமாளின் அருள் எப்போதும் வீட்டில் நிறைந்திருக்கும்.

# தீபத்தில் இத்தனை வகைகள் இருப்பது உங்களுக்கு தெரியுமா?

இறை வழிபாட்டின் போது விளக்கேற்றி வழிபடுவது மட்டும் தான் நமக்கு தெரியும். ஆனால் நாம் ஏற்றும் விளக்கு, இடம், பயன்படுத்தும் பொருள் ஆகியவற்றை பொறுத்து அவற்றின் பெயர்கள், தன்மைகள், சிறப்புகள், பலன்கள் ஆகியவை மாறுபடுகின்றன என்பது பெரும்பாலானவர்களுக்கு தெரியாது. தீபங்களில் எத்தனை வகைகள் உள்ளது பற்றி தெரிந்தால் உங்களால் ஆச்சரியப்படாமல் இருக்கவே முடியாது.

தீபாவளி மற்றும் திருக்கார்த்திகை இவை இரண்டுமே தீபத்தின் திருவிழாவாக கொண்டாடப்படுகின்றன. இருப்பினும் தென் மாநிலங்களில் கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகை தீபத் திருநாள் அன்று மட்டுமே வீடு அல்லது கோவில் முழுவதுமே தீபங்கள் ஏற்றி வழிபடும் வழக்கம் உள்ளது. பொதுவாக நமக்கு தெரிந்தது தங்கம், வெள்ளி, பித்தளை உள்ளிட்ட உலோகங்களால் ஆன விளக்குகளும், மண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்குகள், நவீன யுகத்தில் பயன்படுத்தும் மெழுகினால் செய்யப்பட்ட விளக்குகளும் தான். ஆனால் சாஸ்திர மற்றும் ஆன்மீக முறைப்படி ஏராளமான வகைகளில் விளக்குகள் சொல்லப்படுகின்றன. அப்படி பலரும் அறியாத தீபத்தின் வகைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

தீபத்தின் வகைகள் :

தீபத்தில் மகாலட்சுமி வசிப்பதால், தீபம் ஏற்றியதும் `தீபலட்சுமியே நமோ நம' என்று கூறி வணங்குவது அவசியம். தீபத்தை பல வகையாகச் சொல்லி விளக்குகின்றன ஞானநூல்கள். அவற்றில் சில...

சித்ர தீபம்: தரையில் வண்ணப் பொடிகளால் சித்திரக் கோலம் இட்டு, அதன்மீது ஏற்றப்படும் தீபங்கள்.

மாலா தீபம்: அடுக்கடுக்கான தீபத் தட்டுகளில் ஏற்றப்படுவது.

ஆகாச தீபம்: வீட்டின் வெளிப்புறத்தில் உயர்ந்த பகுதியில் ஏற்றிவைக்கப்படுவது, ஆகாச தீபமாகும். கார்த்திகை மாதம் சதுர்த்தி திதி நாளில்இந்த தீபத்தை ஏற்றி வழிபட்டால், யம பயம் நீங்கும்.

ஜல தீபம்: நதி நீரில் மிதக்க விடப்படும் தீபங்கள் ஜல தீபம் ஆகும்.

நௌகா (படகு) தீபம்: கங்கை கரையோரங்களில் வாழும் மக்கள், புண்ணிய யாத்திரையாக கங்கை தீர்த்துக்குச் செல்பவர்கள், கங்கை நதிக்கு மாலை வேளையில் ஆரத்தி செய்து, வாழை மட்டையின் மீது தீபம் ஏற்றி வைத்து, அதை கங்கையில் மிதக்கவிடுவர். படகு போன்ற வடிவங்களில் தீபங்கள் தயார் செய்தும் மிதக்க விடுவார்கள். இவற்றையே நௌகா தீபங்கள் என்று அழைப்பர். சம்ஸ்கிருதத்தில் `நௌகா' என்றால் `படகு' எனப் பொருள்.

சர்வ தீபம்: வீட்டின் அனைத்து பாகங்களிலும் வரிசையாக ஏற்றிவைக்கப்படுபவை சர்வ தீபமாகும்.

மோட்ச தீபம்: முன்னோர் நற்கதியடையும் பொருட்டு, ஆலய கோபுரங்களின் மீது ஏற்றி வைக்கப்படுவது.

சர்வாலய தீபம்: கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று, மாலை வேளையில் சிவாலயங்களில் ஏற்றப்படுவது. அதாவது, பனை ஓலைகளால் கூடுபோல் பெரிதாகச் செய்து, அதற்கு பூஜை செய்து தீபாராதனை காட்டி, கற்பூரத்தின் ஜோதியை அதில் ஏற்றுவது, சர்வாலய தீபம் ஆகும்.

அகண்ட தீபம்: மலையுச்சியில் பெரிய கொப்பரையில் ஏற்றப்படுவது அகண்ட தீபம்.திருவண்ணாமலை, பழநிமலை, திருப்பரங்குன்றம் முதலான திருத்தலங்களில், அகண்ட தீபத்தைத் தரிசிக்கலாம்.

லட்ச தீபம்: ஒரு லட்சம் விளக்குகளால் ஆலயத்தை அலங்கரிப்பது லட்சதீபமாகும். திருமயிலை, திருக்கழுக்குன்றம் (12 ஆண்டுகளுக்கு ஒருமுறை) முதலான பல ஆலயங்களில் லட்சதீபம் ஏற்றுவது உண்டு.

மாவிளக்கு தீபம்: அம்மன் ஆலயங்களில் நோய் தீர வேண்டிக்கொண்டு மாவிளக்கு ஏற்றுவார்கள். அரிசி மாவில் வெல்லம் போட்டு, இளநீர் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கி, நடுவில் குழித்து நெய் ஊற்றி திரி போட்டு ஏற்றுவது மாவிளக்கு ஆகும்.

காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு கச்சபேஸ்வரர் ஆலயத்தில், கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில், இவ்வகை தீபத்தை தலையில் வைத்துக் கொண்டு ஆலயத்தை வலம் வந்து வழிபடும் வழக்கம் உண்டு. இதை, `மண்டை விளக்கு பிரார்த்தனை' என்கிறார்கள்.

விருட்ச தீபம்: ஒரு மரத்தைப் போன்று கிளைகளுடன் அடுக்கடுக்காக அமைக்கப்படும் தீப ஸ்தம்பங்களில் விளக்கேற்றும்போது, விருட்சத்தைப் போன்று காட்சித் தரும். சிதம்பரம், திருவண்ணாமலை, குருவாயூர் ஆலயங்களில் விருட்ச தீபத்தைக் காணலாம்.

# "கம்பீர் உணர்ச்சிவசப்படுபவர்... பயிற்சியாளராக இருப்பது நல்லதல்ல" ஏ.பி.டிவில்லியர்ஸ்



கவுதம் கம்பீரின் பயிற்சியின் கீழ் கடந்த 12 மாதங்களில் 2வது ஒயிட்வாஷை டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி சந்தித்ததும் அதற்கு கம்பீர் அளித்த விளக்கங்களும் கடும் சர்ச்சைகளைக் கிளப்பி வரும் நிலையில் 360 டிகிரி வீரர் ஏ.பி.டிவில்லியர்ஸ் கம்பீர் குறித்த தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

ரவிச்சந்திரன் அஸ்வினின் யூடியூப் சேனலில் ஏ.பி.டிவில்லியர்ஸ் கூறியதாவது: "இந்திய அணியின் பக்கம் பேச வேண்டுமென்றால், நிச்சயம் இந்தத் தோல்வி ஒரு தர்மசங்கடம் தான். தோல்வி கடினமானதுதான். தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை கவுதம் கம்பீர் எப்படிப்பட்டவர் என்பதை நான் அறியேன். அவர் ஒரு உணர்ச்சிவயப்படும் வீரர் என்பதை அறிவேன். இத்தகைய உணர்ச்சிவய நபர் ஓய்வறையில், அதுவும் பயிற்சியாளராக இருப்பது நல்ல விஷயமல்ல.

இப்படிக் கூறும் அதே வேளையில் திரைக்குப் பின்னால் அவர் அப்படித்தான் இருக்கிறார் என்று சொல்வதாக ஆகாது. சரி தவறு என்பது கிடையாது. முன்னாள் வீரருடன் சில வீரர்கள் சவுகரியமாக உணர்வார்கள். சில வீரர்கள் இந்திய அணிக்கு ஆடாதவர் பயிற்சியாளராக இருந்தால் சவுகரியமாக உணர்வார்கள். கம்பீருக்கு பயிற்சியாளராக அனுபவம் உள்ளது.

கம்பீர் குறித்த கேள்வி கடினமானது, தென் ஆப்பிரிக்கா அணியையே எடுத்துக் கொள்ளுங்கள் இப்போதைய பயிற்சியாளர் சுக்ரியுடன் நான் பணியாற்றியதில்லை, கவுதம் கம்பீர், ரியான் டென் டஸ்சேட், மோர்னி மோர்கெல் ஆகியோருடன் இந்திய ஓய்வறையில் நான் இருந்ததில்லை.

வெளியில் பார்க்க இது ஒரு வலுவான கூட்டணி போல் தெரிகிறது. ஆனால் திரைக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதை யார் அறிவார்கள்? நான் சொல்ல வருவதெல்லாம் ஒவ்வொரு வீரருக்கும் பயிற்சியாளர் என்பவர் ஒவ்வொரு விதமாகவே தெரிவார்.

முன்னாள் வீரர் கேரி கர்ஸ்டன் தலைமையின் கீழ் ஆட எனக்கு மிகவும் பிடிக்கும். அவரும் கம்பீர் போலத்தான். முன்னாள் வீரர்களின் அனுபவம் நமக்கு உதவும் என்று சில வீரர்கள் சவுகரியமாக உணர்வார்கள். அவர்களுக்கு அது உத்வேகமாகக் கூட இருக்கும். ஆனால் மற்ற சிலருக்கு உத்வேகமாக இருக்காது. எப்படியிருந்தாலும் உணர்ச்சிவயப்படுபவர் பயிற்சியாளராக இருப்பது நல்லதல்ல" இவ்வாறு ஏ.பி.டிவில்லியர்ஸ் கூறினார்.

# ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி: கோல் மழை பொழிந்தது இந்திய அணி



14வது ஆடவருக்கான ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி தொடரில் நேற்று சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் 'பி' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா, ஓமனுடன் மோதியது. இதில் இந்திய அணி 17-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் மன்மீத் சிங் (17, 26 மற்றும் 36வது நிமிடங்கள்), அர்ஷ்தீப் சிங் (4, 33 மற்றும் 40வது நிமிடங்கள்), தில்ராஜ் சிங் (29, 32 மற்றும் 57வது நிமிடங்கள்) தலா 3 கோல்கள் அடித்து அசத்தினர்.

குர்ஜோத் சிங் (39 மற்றும் 45வது நிமிடங்கள்), அஜீத் யாதவ் (34 மற்றும் 47வது நிமிடங்கள்), லுவாங் தவுனோஜாம் இங்கலெம்பா (43 மற்றும் 50வது நிமிடங்கள்) ஆகியோர் தலா 2 கோல்கள் அடித்தனர். அன்மோல் ஏக்கா (29வது நிமிடம்), ஷரதா ஆனந்த் (55வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

இந்திய அணிக்கு இது 2வது வெற்றியாக அமைந்தது. முதல் ஆட்டத்தில் இந்திய அணி 7-0 என்ற கோல் கணக்கில் சிலி அணியை வீழ்த்தியது. இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் வரும் டிசம்பர் 2ம் தேதி சுவிட்சர்லாந்துடன் மோதுகிறது. இந்த ஆட்டம் மதுரையில் நடைபெறுகிறது.

மதுரையில் நடைபெற்ற ஆட்டங்களில் நெதர்லாந்து 5-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தையும், மலேசியா 5-1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரியாவையும், தென் ஆப்பிரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தையும், நடப்பு சாம்பியனான ஜெர்மனி 70 என்ற கோல் கணக்கில் கனடாவையும் தோற்கடித்தன. ஜெர்மனிக்கு இது 2வது வெற்றியாக அமைந்தது.

# "பேசாமல் வீட்டுக்குப் போய்விடுங்கள்" பென் ஸ்டோக்ஸ் படை மீது இயன் போத்தம் பாய்ச்சல்!



பாஸ்பால் என்று கூறி எத்தனை முறை தோற்ற போதிலும் 'நாங்கள் மாற மாட்டோம்' என்று கூறுவதைக் கேட்க மிகவும் எரிச்சலாக உள்ளது, இப்படித்தான் ஆடுவீர்கள் என்றால் பேசாமல் வீடு போய்ச்சேருங்கள் என்று இங்கிலாந்து முன்னாள் ஆல்ரவுண்டர் இயன் போத்தம் பென் ஸ்டோக்ஸ் தலைமை இங்கிலாந்தை சாடியுள்ளார்.

"பெர்த் தோல்வி பயங்கரமானது, அதை வர்ணிக்க இதை விட்டால் வேறு வார்த்தை இல்லை. இங்கிலாந்து மீண்டெழ வேண்டும், அதுவும் விரைவில் மீண்டெழ வேண்டும். 'நாங்கள் இப்படித்தான் ஆடுவோம்' என்ற கூற்றைக் கேட்கவே எனக்கு எரிச்சலாக உள்ளது.

இன்னொரு முறை 'அப்படித்தான் விளையாடுவோம்' என்று கூறினால் கையில் இருப்பதைக் கொண்டு டெலிவிஷன் மேல் வீசி எறிவேன். அப்படித்தான் விளையாடுவேன் என்றால் பேசாமல் வீட்டுக்குப் போய்விடுங்கள். இப்போதே கிளம்புங்கள். ஏனெனில் இன்னொரு 50 ஒயிட் வாஷ் தோல்வியைப் பார்க்க விரும்பவில்லை.

நான் இப்படிச் சொல்வதனால் என்னை அவர்களுக்குப் பிடிக்காமல் போகும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் இந்த வார்த்தைகள் அவர்கள் காதுகளைச் சுற்றி ஒலிக்க வேண்டும்.

ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ் போன்ற வீரர்கள் என்ன செய்தார்கள் என்பதை மக்கள் நினைவில் கொண்டுள்ளார்கள். பென் ஸ்டோக்ஸ், ஜோ ரூட் இருவரும் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள். ஜோ ரூட் 39 சதங்கள் அடித்துள்ளார், இருவரும் ஆஸ்திரேலியாவில் சிறப்பாகச் செயல்பட முனைப்புடன் உள்ளனர்.

அதைச் செய்ய வேண்டும் எனில் வெற்றி பெறுவதன் மூலம்தான் செய்ய முடியும். சும்மா பாஸ்பால், அதிரடி ஆக்ரோஷம் என்று கூறிக்கொண்டு தோல்வியடைந்து கொண்டிருந்தால் எப்படிச் செய்ய முடியும்?

இவர்கள் இருவரும்தான் அங்கு நிரூபிக்க வேண்டும், ஏனெனில் மற்ற வீரர்களுக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைக்கும். ஒன்றை மட்டும் அவர்களுக்குக் கூறுகிறேன், ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரேலியாவை வெல்வது மிகப்பெரிய மரியாதையைப் பெற்றுத்தரும்.

ஆஸ்திரேலியாவை அவர்கள் மண்ணில் வீழ்த்துவதுதான் ஒரு அணியின் நம்பிக்கைக்கான அளவுகோல். இதுதான் இங்கிலாந்து அணியைச் செலுத்த வேண்டிய தூண்டுகோலுமாகும்." என்று கூறினார் இயன் போத்தம்.



# மலையாளத்தில் அறிமுகமாகிறார் துஷாரா விஜயன்

உன்னி முகுந்தன் நடித்து வெற்றி பெற்ற 'மார்கோ' படத்தைத் தயாரித்த ஷெரிப் முகம்மது, தனது கியூப்ஸ் என்டர்டெயின்மென்ட்ஸ் சார்பில் அடுத்துத் தயாரிக்கும் படம் 'கட்டாளன்'. இதை பால் ஜார்ஜ் இயக்குகிறார். இதில் மலையாள நடிகர் ஆண்டனி வர்கீஸ் முதன்மைப் பாத்திரத்தில் நடிக்கிறார்.

தெலுங்கு நடிகர் சுனில், கபீர் துகான் சிங், ராப்பர் பேபி ஜீன், ராஜ் திரண்டாசு, பாலிவுட் நடிகர் பார்தத் திவாரி ஆகியோர் நடிக்கின்றனர். அஜனீஷ் லோக்நாத் இசை அமைக்கிறார். அதிரடி ஆக் ஷன், த்ரில்லர் படமான இது மலையாளம், தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னட மொழிகளில் உருவாகிறது.

இதன் ஆக்ஷன் காட்சிகள் படப்பிடிப்பு தாய்லாந்தில் சமீபத்தில் நடந்தது. புகழ் பெற்ற தாய்லாந்து படமான 'ஓங்க் பேக்' படத்தின் ஆக் ஷன் இயக்குநர் கேச்சா காம்பக்டீ மற்றும் அவருடைய குழுவினர் இதில் பணியாற்றினர்.

இந்நிலையில் துஷாரா விஜயன் இப்படத்தில் இணைந்துள்ள தாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படம் மூலம் அவர் மலையாளத்தில் அறிமுகமாகிறார். தமிழில், சார்பட்டா பரம்பரை, நட்சத்திரம் நகர்கிறது, அநீதி, வீர தீர சூரன் ஆகிய படங்களில் நடித்திருக்கிறார் துஷாரா விஜயன்.

# 'அவதார் 3'ம் பாகம் பார்க்க 10 லட்சம் இந்தியர்கள் ஆர்வம்

ஜேம்ஸ் கேமரூன் இயக்கி உலகம் முழுவதும் வரவேற்பைப் பெற்ற திரைப்படம் 'அவதார்'. உலக அளவில் அதிகம் வசூலித்த படமான இதன் அடுத்த பாகம் 'அவதார்: தி வே ஆஃப் வாட்டர்' என்ற பெயரில் 2022ம் ஆண்டு, 160 மொழிகளில் வெளியானது.

இதன் 3ம் பாகம் 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' என்ற பெயரில் தற்போது உருவாகியுள்ளது. சாம் வொர்த்திங்டன், ஸோயி சல்டானா, சிகோனி வீவர், ஸ்டீபன் லங் உள்ளிட்ட பலர் இதில் நடித்துள்ளனர்.

டிச.18ம் தேதி வெளியாக இருக்கும் இப்படம் இந்தியாவில் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இந்தப் படத்தைப் பார்க்க, புக் மை ஷோ செயலியில் 10 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்த எண்ணிக்கை ரிலீஸ் நெருங்கும்போது அதிகரிக்கும் என்கிறார்கள்.

"'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' படத்தில் அதிகமான பண்டோராவை பார்ப்பீர்கள்; சாகசங்களைக் கொண்ட இந்தப் படத்தில் உணர்ச்சிகரமான காட்சிகளும் அதிகமாக இருக்கும்" என்று ஜேம்ஸ் கேமரூன் ஏற்கெனவே கூறியிருந்தார்.





# தாய்மாமன் சீர்வரிசை கதையில் ஆண்டனி

கோவா 56வது சர்வதேச திரைப்பட விழாவில், 'வேவ்ஸ் பிலிம் பஜார்' என்ற பிரிவில், சிறந்த திரைப்படத்துக்கான அடையாள விருதை 'ஆக்காட்டி' என்ற படம் பெற்றுள்ளது. இதன் இயக்குனர் ஜெய்லட்சுமி, இணை தயாரிப்பாளர் சுனில் குமார், ஒலி வடிவமைப்பாளர் ஹரி பிரசாத், காஸ்டிங் இயக்குனர் சுகுமார் சண்முகம் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு இவ்விருதை பெற்றனர்.

தென்தமிழக கிராமங்களில் காணப்படும் தாய்மாமன் சீர்வரிசை முறையை மையப்படுத்தி உருவான இப்படம், சமூதாய மரபுகள் உருவாக்கும் நெருக்கடிகளையும், அதனால் மனிதர்களிடையே ஏற்படும் சிக்கல்களையும் அழுத்தமாக பதிவு செய்கிறது. 'மேற்குத்தொடர்ச்சி மலை' ஆண்டனி, முல்லையரசி, சுபாஷ் நடித்துள்ளனர். எஸ்.ஈ.எசக்கி ராஜா ஒளிப்பதிவு செய்ய, தீபன் சக்ரவர்த்தி இசை அமைத்துள்ளார். ராம் குமார் எடிட்டிங் செய்ய, கார்த்திக் நேத்தா பாடல்கள் எழுதியுள்ளார்.



## திருவையாறில் தியாகராஜர் சுவாமிகளின் 179வது ஆராதனை விழா பந்தல்கால் முகூர்த்தம்

தஞ்சாவூர், டிச.01-

திருவையாறு தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது ஆராதனை விழாவுக்கான பந்தக்கால் முகூர்த்தம் இன்று காலை நடைபெற்றது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகள் திருவையாறில் முக்தி அடைந்தார். இவர் பகுல பஞ்சமி தினத்தில் முக்தி அடைந்ததால் அன்றைய தினத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு 179வது ஆண்டாக தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா வரும் ஜனவரி 3ம் தேதி தொடங்கி 7ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதையொட்டி பந்தக்கால் முகூர்த்தம் இன்று தியாகராஜ சுவாமிகளின் சமாதி அருகே காவிரி ஆற்றங்கரையில் நடைபெற்றது. இதில் அறங்காவலர்கள் சுரேஷ் மூப்பனார், டெக்கான் என்கே மூர்த்தி, பொருளாளர் ஆர் கணேஷ், உதவி செயலாளர்கள் கே.என். ராஜகோபாலன் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து அறங்காவலர் சுரேஷ் மூப்பனார் கூறியதாவது: திருவையாறில் ஆண்டுதோறும் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த வருடம் 179வது ஆராதனை விழா வருகிற ஜனவரி 3 ம் தேதி தொடங்கி 7ம் தேதி வரை திருவையாறு நடைபெற உள்ளது.

இதில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு 7ம் தேதி பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஒரே நேரத்தில் இசைத்து இசை அஞ்சலி செலுத்த உள்ளனர்.

இந்த விழா ஜனவரி 3ம் தேதி மாலை 4.30 மணிக்கு மங்கல இசையுடன் தொடங்குகிறது. விழாவுக்கு சபாவின் தலைவர் ஜிகே வாசன் தலைமை வகிக்க உள்ளார் . இதில் சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் பங்கேற்க உள்ளார். அன்றைய தினம் இரவு தேசிய நிகழ்ச்சிகள் 9.30 மணி முதல் 11 மணி வரை நேரலையாக ஒளிபரப்பப்பட உள்ளது.

தொடர்ந்து நாள்தோறும் காலை முதல் இரவு வரை பல்வேறு இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்த உள்ளனர். விழாவுக்கான ஏற்பாடுகளை சபாவின் அறங்காவலர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இணைந்து செய்து வருகின்றனர்.

## முழு கொள்ளளவை எட்டும் செம்பரம்பாக்கம் ஏரி; பூண்டி ஏரியில் 4,000 கனஅடி நீர் வெளியேற்றம்

சென்னை, டிச.01-

புயல் எச்சரிக்கையையொட்டி ஏற்கெனவே முழு கொள்ள ளவை எட்டும் நிலையில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து விநாடிக்கு 2,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பூண்டி ஏரியிலிருந்து 4,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.



புயல் எச்சரிக்கையையொட்டி, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரி கிட்டத்தட்ட முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தொடர்ந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த நீர்மட்டம் 24 அடியில் 21.73 அடியாக உள்ளது. மொத்த கொள்ளளவான 3.645 டி.எம்.சி. அளவில், தற்போது 3.048 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது.

ஏரிக்கு தற்போது நீர்வரத்து விநாடி க்கு 100 கன அடியாக மட்டுமே இருக்கும் நிலையில், பாதுகாப்பு கருதி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகப்படுத்தப்பட்டது. காலையில் மொத்தமாக 1,394 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இதில், உபரிநீராக 1,200 கனஅடி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டது. சென்னை குடிநீர்த் தேவைக்காக 165 கன அடியும், சிப்காட் பயன்பாட்டுக்கு 4 கனஅடியும் நீர் திறந்துவிடப்படுகிறது. இந்த 1,200 கனஅடி நீர் இரவு 2 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் (காலை 6 மணி வரை) ஏரிப் பகுதியில் மழைப்பொழிவு எதுவும் இல்லை. இருப்பினும், கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு, நீர்பாசனத் துறையினர் ஏரியின் நீர் இருப்பை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

முழு கொள்ளளவை எட்டும் செம்பரம்பாக்கம் ஏரி; பூண்டி ஏரியில் 4,000 கனஅடி நீர் வெளியேற்றம்

டிட்வா புயல் தாக்கம்: வயல்கள், குடியிருப்புகளை சூழ்ந்த மழைநீர் டெல்டா மாவட்டங்களின் நிலவரம் என்ன?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நவ.29,30 ஆகிய தேதி களில் மாவட்டத்தில் மிகக் கனமழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், பேரிடரை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகமும், நெடுஞ்சாலைத் துறையும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை ஊழியர்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளனர். இதற்காக, 4 ஜே.சி.பி. இயந் திரங்கள், 10 மரம் அறுக்கும் கருவிகள், மண்வெட்டிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. டிட்வா புயல் காரணமாக இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் மிக கனமழைக் கான ஆரஞ்சு எச்சரிக்கையும், ஒரு சில பகுதிகளில் அதிக னமழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் விடுத்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கங்களில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நேற்று மாலை நிலவரப்படி பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து விநாடிக்கு 4,000 கன அடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் புழல் ஏரியிலிருந்து வினாடிக்கு 1,500 கன அடி, வீதம் உபரி நீர் வெளி யேற்றப்பட்டு வருகிறது.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து உபரிநீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, நெய்வேலி, எறையூர், பீமன்தோப்பு. கொரக்க ந்தண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம். திருக்கண்டலம், ஆத்தூர். பண்டிக்காவனூர், ஜெகநாத புரம். புதுகுப்பம். கன்னிப் பாளை யம், வன்னிப்பாக்கம், அசூவன் பாளையம், மடியூர். சீமாவரம். வெள்ளிவாயல்சாவடி, நாப்பாளையம், இடையான்சாவடி. மணலி, மணலி புதுநகர் சடையான்குப்பம். எண்ணூர் பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## திருப்பத்தூர் அருகே 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து: 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழப்பு

திருப்பத்தூர், டிச.01-

திருப்பத்தூர் அருகே 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலிருந்து திண்டுக்கல்லுக்கு அரசுப் பேருந்து சென்றது. அதேசமயத்தில் திருப்பூரிலிருந்து காரைக்குடிக்கு மற்றொரு அரசுப் பேருந்து வந்தது.

இரு பேருந்துகளும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே வைரவன்பட்டி சமத்துவபுரம் பகுதியில் இன்று மாலை 4.20 மணிக்கு சென்றபோது நேருக்கு, நேர் மோதின.

இதில் சம்பவ இடத்திலேயே 9 பெண்கள் மற்றும் ஓட்டுநர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களை அவ்வழியாக வந்தோர் மீட்டு 108 ஆம்புலன்ஸ்கள் மூலம் திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் அனுமதித்தனர். சம்பவ இடத்தை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி பார்வையிட்டார்.


திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் காயமடைந்தோருக்கு ஆறுதல் கூறினார். இதுகுறித்து நாச்சியாபுரம் போலீஸார் விசாரிக்கின்றனர். மேலும் இந்த கோர விபத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதையடுத்து வாகனங்கள் மாற்று வழித்தடத்தில் திருப்பிவிடப்பட்டன.

முதல்கட்ட விசாரணையில், திண்டுக்கல் சென்ற அரசுப் பேருந்து அதிவேகமாக சென்றதால், இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

## புதுச்சேரி: டிட்வா புயலால் நோணாங்குப்பம் படகு சவாரி நிறுத்தம்

புதுச்சேரி, டிச.01-

டிட்வா புயலால் நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றில் படகு குழாம் மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது. மேலும், படகு சவாரியும் நிறுத்தப்பட்டுள்ளது.



புதுச்சேரியை அடுத்த நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் படகு குழாம் செயல்பட்டு வருகிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் சுண்ணாம்பாற்றில் பயணித்து பேரடைஸ் பீச்சுக்கு சென்று மகிழ்ந்து மீண்டும் படகில் பயணித்து வந்து படகு குழாமுக்கு திரும்புவது மறக்க முடியாத அனுபவம்.

இதனால் வாரந்தோறும் சனி, ஞாயிறு மட்டுமின்றி விடுமுறை தினங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகளவில் இருக்கும். இந்நிலையில் டிட்வா புயலால் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் நோணாங்குப்பம் சுண்ணாம்பாற்றின் படுகை அணை நிரம்பி வழிவதோடு, கடலை நோக்கி தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. கடலும் ஆர்ப்பரித்து காணப் படுகிறது.

ஆகவே பாதுகாப்பு கருதி நோணா ங்குப்பம் படகு குழாமில் படகு சவாரி நிறுத்தப்பட்டு, படகுகள் கரைகளில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. தற்காலிகமாக படகு இல்லமும் மூடப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை படகு குழாம் மூடப்படுவதாக தகவல் தெரிவித்துள்ளனர்.

## வட தமிழக கடலோர பகுதிகளுக்கு இணையாக நகரும் டிட்வா புயல்: எங்கெல்லாம் ரெட், ஆரஞ்சு அலர்ட்?

சென்னை, டிச.01-

வங்கக் கடலில் நிலவும் டிட்வா புயல், வட தமிழக கடோலர பகுதிகளுக்கு இணையாக நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக இன்று (நவ.30) திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டையில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. நாளை (டிச.1) திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடதமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், சென்னைக்கு தென்கிழக்கே 180 கிமீ தொலைவில் டிட்வா புயல் நிலை கொண்டிருந்தது. அப்பொழுது, புயலுக்கும், வடதமிழக கடற்கரைக்குமான குறைந்தபட்ச தூரம் 70 கிமீ ஆக இருந்தது. இது வடதமிழக கடலோர பகுதிகளுக்கு இணையாக வட திசையில் நகரக்கூடும். அவ்வாறு நகரும்போது வட தமிழக கடற்கரையிலிருந்து, குறைந்தபட்ச தூரமானது, 30 கிமீ ஆக இருக்கக்கூடும்.

இதன் காரணமாக இன்று (நவ.30), வட தமிழகத்தில் அநேக இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ரெட் அலர்ட்: இன்று (நவ.30) திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டையில் ஒருசில இடங்களிலும் கன முதல் மிக கனமழையும் ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

ஆரஞ்சு அலர்ட்: இன்று (நவ.30) சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும்,திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

நாளையும், நாளை மறுதினமும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (டிச1.) திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. டிசம்பர் 3 முதல் 6ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில். தென் தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று அதிகபட்சமாக 65 கிமீ வேகத்தில் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகம், புதுச்சேரியில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக காரைக்காலில் 19 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் 17 செமீ, நாகப்பட்டினம், மயிலாடுதுறையில் தலா 15 செமீ, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தலா 14 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம், நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி, தொண்டி, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் 13 செமீ, கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு, திருவாரூர் மாவட்டம் நன்னிலம், நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை, வேளாங்கண்ணி, வேதாரண்யத்தில் தலா 12 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கொளத்தூரில் 246 மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்ட பணியை முடித்த ‘முல்லை’ இயந்திரம்

சென்னை, டிச.01-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 5வது வழித்தடத்தில் கொளத்தூர் சாய்வு தளத்திலிருந்து கொளத்தூர் நிலையம் வரை கீழ் பாதையில் 246 மீட்டர் தொலைவுக்கு ‘முல்லை’ என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இதற்கிடையே, கொளத்தூர் நிலையம் ஸ்ரீனிவாசா நகர் வரை 1,060 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் அமைக்கும் பணியை ‘குறிஞ்சி’ இயந்திரம் தொடங்கியது.





சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில், 116.1 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப் படுகிறது. இவற்றில், மாதவரம் சோழிங்க நல்லூர் வரையிலான 5வது வழித்தடம் முக்கியமானதாகும். 5 சுரங்கப்பாதை மெட்ரோ ரயில் நிலையங்களும், 39 உயர்மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களும் இத்தடத்தில் அமைக்கப்படுகின்றன.

இத்தடத்தில் சுரங்கப் பாதை பணிக்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலங்களின் பெயர்களைக் கொண்ட சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, கொளத்தூர் சாய்வுதளத்தில் இருந்து கொளத்தூர் நிலையம் வரை 247 மீட்டர் நீளத்துக்கு குறிஞ்சி என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் மூலமாக, சுரங்கப்பாதை அமைக்கும் பணி கடந்த பிப்.18ம் தேதி தொடங்கி ஆகஸ்டில் நிறைவடைந்தது.

அதைத்தொடர்ந்து, கொளத்தூர் சாய்வு தளத்தில் இருந்து கொளத்தூர் நிலையம் வரை 246 மீட்டருக்கு கீழ்பாதை (இரண்டாவது பாதை) அமைக்கும் பணியை ‘முல்லை’ என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் மே 23ம் தேதி பணியை தொடங்கியது. இந்த இயந்திரம் பணியை முடித்து, கொளத்தூர் நிலையத்தை நேற்று வெற்றிகரமாக வந்தடைந்தது.

அப்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), இணை பொது மேலாளர் எம்.கார்த்திகேயன் உள்பட பலர் உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

இதுதொடர்பாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: சுரங்கம் தோண்டும் இயந்திரமான ‘முல்லை’, 1.8 மீட்டர் மிகக் குறைந்த சுமை, 3.8 சதவீதம் செங்குத்தான சாய்வு மற்றும் அதிக போக்குவரத்துக்கு உட்பட்ட உள்வட்டச் சாலையின் நடுவில் தரைப் பாதுகாப்புக்கான தேவை போன்ற அனைத்து சவால்களையும் கடந்து எந்தவித இடையூறும் இல்லாமல் சுரங்கப்பாதை பணியை நிறைவு செய்துள்ளது.

அதேபோல், ‘குறிஞ்சி’ சுரங்கம் தோண்டும் இயந்திரம், கொளத்தூர் நிலையம் முதல் ஸ்ரீனிவாசா நகர் வரை 1,060 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் அமைக்கும் பணியை தொடங்கியுள்ளது. இந்த இயந்திரம் கடினமான பாறைகள் மற்றும் 230 மீட்டர் நீளத்துக்கு வளைவுகளையும் கடந்து செல்லும்.

கொளத்தூர் மெட்ரோவில் ஒரேநேரத்தில், ஒரு சுரங்கம் தோண்டும் இயந்திரம் (குறிஞ்சி) பணியைத் தொடங்கியிருப்பதும், மற்றொன்று (முல்லை) பணியை முடித்து வெளியே வந்திருப்பதும் நம் நாட்டில் இதுவே முதல் முறையாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## துண்டை மாற்றியதால், அவர் கருத்து மாறிப்போச்சு: செங்கோட்டையன் குறித்து கோபிசெட்டிபாளையத்தில் இபிஎஸ் விமர்சனம்

ஈரோடு, டிச.01-

கோபிசெட்டி பாளையத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். கோபிசெட்டிபாளையம் அதிமுகவின் கோட்டையாக கருதப்பட்டு வந்தது. இந்த கோட்டையின் தளபதியாக இருந்த அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், சமீபத்தில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

இணைந்தவர், நேற்று கோபிசெட்டிபாளையத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார். அவருக்கு பரவலாக வரவேற்பு இருந்தது. இந்நிலையில், இன்று கோபியில் எடப்பாடி கே.பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரச்சாரக்கூட்டத்தில் எடப்பாடி பேசியதாவது, “இந்த தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என்று யார் யாரோ கனவு காண்கிறார்கள்.

ஆனால் இது அதிமுக வின் கோட்டை. கோபிச்செட்டி பாளையத்தில் அதிமுக வேட்பாளர் அதிக வாக் குகள் பெற்று வெற்றி பெறு வார். வாக்குகளை கேட்க வீடு வீடாக வந்தவர், ராஜினாமா செய்ய மக்களிடம் அனுமதி கேட்டாரா?” கிட்டதட்ட 2,3 ஆண்டு காலமாக இயக்கத்திற்குள் இருந்துகொண்டே இயக்கத்திற்கு எதிராக செயல்பட்டார்.

அதனால்தான் நீக்கப்பட்டார்” மாற்றுக்கட்சி க்கு போய் இருக்கிறார்; போனவர் சும்மா இருந்தால் பரவாயில்லை; தூய்மையான ஆட்சியைக் கொடுப்போம் என்கிறார்; எம்ஜிஆர், ஜெயலலிதா, நான் முதலமைச்சராக இருந்தபோது செங்கோட்டையன் அமைச்சராக இருந்தார்; அப்போது நாங்கள் தூய்மையான ஆட்சி கொடுக்கலையா? துண்டை மாற்றியதால், அவர் கருத்து மாறிப்போச்சு என செங்கோட்டையன் குறித்து எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161